ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/40 - 2018 දෙසැම්බර් 21 වැනි සිකුරාදා - 2018.12.21

*2102/40 ஆம் இலக்கம் - 2018 ஆம் திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*பகுதி 4(2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்துக்கு (இதனகத்துப் பின்னர் "உரிமம்" எனக்குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய சிறிய மற்றும் நடுத்தரளவுஉரிமங்களுக்குரிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கான திருத்தங்கள்27.09.2018 முதல் அமுலுக்கு வரும் வகையில் 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமச் சட்டத்தின் நோக்கத்திற்கமைய இத்தால் பிரசுரிக்கப்படுகின்றது.இத் திருத்தங்கள் இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு செத்தெம்பர் இருபத்தி ஏழாம் திகதி முதல் அமுலுக்கு வரும். முற்பட்டகாலப் பயன்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*சபையின் ஆணைப்படி,*

*பிரசன்ன லியனகே,*
*செயலாளர்.*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்*
*இல: 30 A,*
*மலலசேகர மாவத்தை,*
*கொழும்பு 07.*
*2018, செத்தெம்பர் 21 ஆந் திகதி*

# சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பந்தி 1.1A சேர்க்கப்பட்டுள்ளதுடன், பந்தி 1.1 திருத்தப்பட்டுள்ளது. புதிய பகுதி அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன், நீக்கப்பட்ட பகுதி வெட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**பிரிவு 1**

***சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உரிமங்கள்***

**இந்த நியமத்தின் உத்தேச நோக்கெல்லை**

1.1 சிறிய நடுத்தர உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமமானது **சிறிய மற்றும் நடுத்தர அளவிளான உரிமங்களது** பாவனையை உத்தேச நோக்கமாகக் கொண்டுள்ளது. இப் பிரிவானது சிறிய நடுத்தரளவு உரிமங்களின் பண்புகளை விபரிக்கின்றது.

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தினது பிரிவு 5 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கீழ்வரும் உரிமங்கள் இந்த நியமத்தின் படி சிறிய நடுத்தரளவு உரிமங்கள் என்ற வரைவிலக்கணத்திற்கு உட்படாது.

...

- இந்த நியமத்தின் பந்தி 1.1 A ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில், எம்பவர் பலகையில் (Empower Board) பட்டியலிடப்பட்ட உரிமங்கள் தவிர்ந்த, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இல்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்ற பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட உரிமங்கள்.

1.1. A 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வலுவூட்டல் பலகையில் பட்டியலிடப்பட்ட உரிமங்கள் அத்தகைய பலகையில் பட்டியலிடப்பட்ட திகதிக்குப் பின்னர்வரும் தொடர்ச்சியான மூன்று நிதிக் காலப் பகுதிகளுக்கு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகப் பின்வரும் மேலதிக வெளிப்படுத்தல்களுடன் சிறிய நடுத்தரளவிலான உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தைப் பயன்படுத்தலாம்.

- 2018 சனவரி 01 அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் நிதியாண்டுகளுக்கு SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்தில் இருந்தான வருமானம்* நியமம் பயன்படுத்தப்பட்டிருந்தால், அக்காலப்பகுதிக்கான முற்றடக்க வருமானக் கூற்றின் மீதான தாக்கம் குறித்த வெளிப்படுத்தல்கள். அத்தகைய தாக்கத்தை தீர்மானிப்பது சாத்தியமற்றவிடத்து. அந்த விடயம் வெளிப்படுத்தப்படும்.

- உரிமம் சிக்கலான நிதிக் கருவிகளைக் கொண்டிருக்குமிடத்து, SLFRS 9 *நிதிக்கருவிகளின்* நியமத்தின் படியாகத் தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்கள்.

- உரிமமானது அதன் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை மதிப்பிடுவதில் SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு* நியமத்தினைப் பின்பற்றியிருப்பின், SLFRS 13 நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்கள்.